டிஜிட்டல் டெய்லி

அக்ரி-டாக்டர்

agridoctor.in

கல்யாண் வெல்லர்ஸ்

agridoctor.in | 28.11.2026 சனிக்கிழமை | பக்கங்கள் 27 | RNI No.TNTAM/2012/49602 | Vol.14, Issue : 135 | Madurai | Online Edition

மீன்வளம், கால்நடை வளர்ப்பு, பால்வள அமைச்சகம் சார்பில் கொண்டாடப்பட்ட தேசிய பால் தின விழா

புது தில்லி, நவ.27

மத்திய மீன்வளம், கால்நடை வளர்ப்பு, பால்வள அமைச் சகத்தின் கால்நடை வளர்ப்பு, பால்வளத்துறை சார்பில் பீகார் மாநிலம், பாட்னாவில் தேசிய பால் தினம் 2026 நவம்பர் 26-ம் தேதி அன்று கொண்டாடப்பட்டது.

இவ்விழாவில், பீகார் மாநில முதலமைச்சர் சாம்ராட் சவுத்ரி, மத்திய மீன்வளம், கால்நடை வளர்ப்பு, பால்வளத்துறை அமைச்சர் ராஜீவ் ரஞ்சன் சிங் மற்றும் துறை சார்ந்த அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

விழாவில் பேசிய பீகார் முதலமைச்சர் சாம்ராட் சவுத்ரி, கிராமப்புற வளர்ச்சிக்கும், மாநிலப் பொருளாதாரத்துக்கும் கால்நடை வளர்ப்போர் ஆற்றிய பங்களிப்பை எடுத்துரைத்தார். பீகாரில் தினமும் 48 லட்சம் லிட்டர் பால் உற்பத்தி செய்வ தாகவும், இதை ஒரு கோடி லிட்டராக உயர்த்த இலக்கு நிர்ணயிக் கப்பட்டுள்ளதாகவும் கூறினார். இவ்விழாவில், நாடு முழுவதிலும் இருந்து கால்நடை விவசாயிகள், பால் கூட்டுறவு சங்கத்தினர் உள்ளிட்டோர் காணொலி வாயிலாக பங்கேற்றனர்.



முறையான ஆவணங்கள் இல்லாத ரூ.14 லட்சம் மதிப்பிலான விதைக்குவியல்களுக்கு விற்பனைத் தடை



திருப்பூர், நவ,27 திருப்பூர் மாவட்டம், தாராபுரம் வட்டார பகுதிகளில் தற்போது பரவலாக பருவமழை பெய்து வருகிறது. இதனை தொடர்ந்து விவசாயிகள் காய்கறி சாகுபடி செய்ய தயார் நிலையில் உள்ளனர். விவசாயிகளுக்கு உரிய நேரத்தில் தரமான விதை களை கிடைக்க உறுதி செய்யும் பொருட்டு ஈரோடு, விதை ஆய்வுத் துணை இயக்குநர் பெ.சுமதி தலைமையில் விதை ஆய்வாளர்கள் தாராபுரம், ஈரோடு மற்றும் பவானி ஆகியோர் அடங்கிய குழுவினர் திடீர் ஆய்வு மேற்கொண்டனர்.

ஆய்வின் போது விதை விற்பனை நிலையங்களில் பெறப்பட்ட விதைகளின் கொள்முதல் பட்டியல், விதைகள் இருப்பு பதிவேடு, விதைகள் இருப்பு விவரப்பலகை, விதை விற்பனை உரிமம் மற்றும் விவசாயிகளுக்கு வழங்கப்படும் விற்பனை பட்டியல் குறித்து விவரம் சரிபார்க்கப்பட்டது. விதை விற்பனை பட்டியலில் பயிர், இரகம், நிலை, குவியல் எண், காலாவதி நாள், விதை வாங்கும் விவசாயின் பெயர், ஊர், கைபேசி எண் குறிப்பிடப்பட்டு விவசாயியின் கையொப்பம், விற்பனையாளரின் கையொப்பம் ஆகிய விவரங்கள் உள்ளதா என ஆய்வு செய்யப்பட்டது. மேலும், அதிகபட்ச சில்லறை விலைக்கு மேல் விற்பனை செய்யபட்டுள்ளதா என்பதும் உறுதி செய்யப்பட்டது. முறையான ஆவணங்களை பராமரிக்காத விதை விற்பனை நிலையங் களில் சுமார் ரூ.14.18 இலட்சம்மதிப்பிலான 524 கிலோ எடை கொண்ட 13 விதை குவியல்களுக்கு விதை விற்பனை தடை விதிக்கப்பட்டது. இது குறித்து ஈரோடு, விதை ஆய்வுத் துணை இயக்குநர், மேலே குறிப்பிடப்பட்டுள்ள நடை முறைகளை மீறினால் விதைச்சட்டம் 1966, விதை விதிகள் 1968, மற்றும் விதை கட்டுப்பாட்டு ஆணை 1983 ஆகியவற்றின் கீழ் விதை விற்பனையாளர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

GREENOVATE 2026 மாநில அளவிலான ஹேக்கத்தான் போட்டியில் TNAU மாணவர்கள் வெற்றி



கோயம்புத்தூர், நவ,27

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம், கோயம்புத்தூரைச் சேர்ந்த B.Tech. உயிரித் தொழில்நுட்ப மாணவர்கள் மெஹனா S.K., விமல் S. மற்றும் வர்சா P. ஆகியோர், 26.11.26 அன்று வாணியம் பாடியில் உள்ள இஸ்லாமியா கல்லூரி (தன்னாட்சி) வளாகத்தில் நடைபெற்ற GREENOVATE 2026 மாநிலளவிலான ஹேக்கத் தான் போட்டியில் உணவு அறிவியல் (Food Science) பிரிவில் முதல் பரிசை வென்றனர்.

StartupTN ஹோசூர் பிராந்திய மையம் மற்றும் Green Valley Innovation and Incubation Forum (GVIIF) ஆகியவை இணைந்து நடத்திய இப்போட்டியில், தமிழ்நாடு முழுவதிலிருந்தும் மாணவர்கள் மற்றும் தொழில்முனைவோர் பங்கேற்ற சுமார் 120 அணிகள் கலந்து கொண்டன. அவற்றில் உணவு அறிவியல், உயிர் அறிவியல் மற்றும் வேளாண் தொழில்நுட்பம் ஆகிய பிரிவுகளில் 44 அணிகள் இறுதிப் போட்டிக்குத் தேர்வு செய்யப்பட்டன. நிலைத் தன்மையை அடிப்படையாகக் கொண்ட புதுமையான முயற்சியான “Zea Packaging” என்ற திட்டத்திற்காக TNAU மாணவர் அணி முதல் பரிசைப் பெற்றது. இத்திட்டம் மக்காச்சோளத்தின் உலர்ந்த தோகையைப் பயன்படுத்தி மக்கும் தன்மை கொண்ட பாக்கெட்டுகள் (Biodegradable sachets) தயாரிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

திருபத்தூர் மாவட்ட ஆட்சியர் V.நல்லசிவன், சிறப்பு விருந்தின ராகவும், திருபத்தூர் மாவட்ட தொழில் மையத்தின் (DIC) பொது மேலாளர் M.ராமமூர்த்தி, கௌரவ விருந்தினராகவும் கலந்து கொண்டு நிகழ்ச்சியைச் சிறப்பித்தனர். இப்போட்டி தொழில்முனை வோர் வளர்ச்சி, நிலைத்தன்மை சார்ந்த தீர்வுகள், வழிகாட்டுதல் மற்றும் தொழில்முறை தொடர்புகளை மேம்படுத்துவதற்கான வாய்ப்புகளை வழங்கியது. TNAU துணைவேந்தர் (பொ) முனைவர் M.ரவீந்திரன், வேளாண்மைப் புல முதன்மையர் முனைவர் C.பாபு, CPMB இயக்குநர் முனைவர் N.செந்தில் மற்றும் உயிரித் தொழில் நுட்பத் துறைத் தலைவர் முனைவர் சி.கோகிலாதேவி ஆகியோர் மாணவர்களின் சாதனைக்கு பாராட்டுத் தெரிவித்தனர்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN
JEWELLERS

எல்லா நாளும்
தள்ளுபடி உண்டு
உங்களுக்கு மட்டும்

சிறப்புச்சலுகை



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல்
நகை எடுக்க வரும்போது
அக்ரி டாக்டர் வாசகர்
என்று அறிமுகப் படுத்திக்
கொண்டு சிறப்பான
சேவையையும், பிரத்யேக
தள்ளுபடியும் பெறுங்கள்.
இந்த தள்ளுபடி உங்களுக்கு
மட்டுமே அதுவும் எல்லா
நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும்
நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை
எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.
96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

நெற்பயிரில் குலை நோய் மற்றும் பழநோயின் தாக்குதலைக் கட்டுப்படுத்திட வேளாண்மை இணை இயக்குநர் ஆலோசனை

புதுக்கோட்டை, நவ,27

புதுக்கோட்டை மாவட்டத்தில் வானிலை மேகமூட்டமாகவும், காற்றில் ஈரப்பதம் அதிகமாகவும் இருக்கும் சூழலில் சாகுபடி செய்யப்பட்டுள்ள சம்பா நெற்பயிரில் குலைநோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. இதனைக் கட்டுப்படுத்திட கீழ்க்கண்ட வழிமுறைகளைக் கடைப்பிடிக்குமாறு மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் ந.சண்முகஜெயந்தி ஆலோசனை தெரிவித்துள்ளார்.

குலைநோயின் அறிகுறிகள்



நாற்றங்காலில் தொடங்கி அனைத்து வளர்ச்சிப் பருவங்களிலும் குலைநோய் நெற்பயிரைத் தாக்குகிறது. இலைகளின் மேல் பழுப்பு நிறத்தில் சாம்பல் நிற மையப் பகுதியுடனும் காய்ந்த ஓரங்களுடன் கூடிய கண்வடிவப் புள்ளிகள் காணப்படும். பல புள்ளிகள் ஒன்று சேர்ந்து பெரிய ஒழுங்கற்ற திட்டுக்களை உருவாக்கும். இந்நோய் தீவிரமாகத் தாக்கும் போது பயிர் முழுவதும் எரிந்தது போன்று தோற்ற மளிப்பதால் குலைநோய் எனப்படுகிறது. நெற்பயிரின் கழுத்துப் பகுதியில் இந்நோய் தாக்கும்போது கறுப்பு நிறமாக மாறிக் கதிர் மணிகள் சுருங்கியும், கதிர்கள் உடைந்தும் தொங்கும். இந் நிலையில் இது 'கழுத்துக் குலைநோய்' எனப்படும். இந்நோய் நெற் பயிரின் கணுக்களில் தாக்கும்போது அவை கறுப்பு நிறமாக மாறி உடைந்துவிடும் நிலையானது 'கணுக்குலைநோய்' எனப்படும்.

மேலாண்மை முறைகள்

குலைநோயைக் கட்டுப்படுத்திட விவசாயிகள் ஒருங்கிணைந்த மேலாண்மை முறைகளைக் கடைப்பிடித்தல் வேண்டும். நோயற்ற பயிரிலிருந்து விதைகளைத் தேர்வு செய்ய வேண்டும். நடவு வயலில் நோயற்ற நாற்றுகளை நடவு செய்ய வேண்டும். வயலிலும் வரப்பிலும் உள்ள களைகளை அகற்றிட வேண்டும். இந்நோய்த் தாக்குதலைக் கட்டுப்படுத்திட டிரைசைக்ளோசோல் 75 டபிள்யு.பி என்ற மருந்து 200 கிராம் அல்லது அசோஸ்க்சிட்ரோபின் 25 எஸ்.சி என்ற மருந்து 200 மி.லி இதில் ஏதேனும் ஒன்றை ஒரு ஏக்கருக்கு 200 லிட்டர் நீரில் கலந்து தெளித்துக் கட்டுப்படுத்தலாம்.

நெற்பழநோய்



நெற்பயிரினைத் தாக்கும் பழநோய், நெற்கதிர் மற்றும் மணிகளைத் தாக்கிச் சேதம் விளைவிக்கிறது. பாதிப்படைந்த நெல் மணிகள் மஞ்சள் நிறத்துடன் பழுத்து காணப் படும். முதிர்ச்சியடையாத மணிகள் உடைந்து காணப்படும். நெல் மணிகள் பதராகி அவற்றின் தரம் முற்றிலும் பாதிக்கப்படும். பழ நோயினால் பாதிப்படைந்த வயல்களில் அறுவடைக்குப் பின் வைக் கோல் மற்றும் தாள்களை அழித்துவிட வேண்டும். இதனைக் கட்டுப் படுத்திட கதிர்பிடிக்கும் தருணம் மற்றும் 50 சதம் கதிர் வெளிவரும் தருணம் ஆகிய இரண்டு தருணங்களிலும் ஒரு ஏக்கருக்கு காப்பர் ஹைட்ராக்சைடு 77 W.P. என்ற மருந்து 500 கிராம் அல்லது ஹெக்சாகனசோல் 5 EC என்ற மருந்து 400 மி.லி இதில் ஏதேனும் ஒன்றை 200 லிட்டர் நீரில் கலந்து தெளித்துக் கட்டுப்படுத்தலாம்.

இவ்வாறு நெற்பயிரில் தோன்றும் குலைநோய் மற்றும் பழ நோயினைக் கட்டுப்படுத்திடுமாறும், மேலும் கூடுதல் விவரங் களுக்குத் தங்கள் பகுதி வட்டார வேளாண்மை விரிவாக்க மையங்களை அணுகிடுமாறும் மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் ந.சண்முகஜெயந்தி ஆலோசனை தெரிவித்துள்ளார்.

தென்னையில் மகசூலை உயர்த்த TNAU வேர் டானிக் தோட்டக்கலைக் கல்லூரி மாணவர்கள் செயல்விளக்கம்



இராணிப்பேட்டை, நவ.27

ஆதிபராசக்தி தோட்டக்கலைக் கல்லூரி மாணவர்கள் சார்பில், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் பரிந்துரைத்து உள்ள தென்னை வேர் ஊட்டச்சத்து டானிக் தயாரிப்பு மற்றும் அதன் பயன்பாடு குறித்து விவசாயி களுக்கு செயல் விளக்கம் அளிக்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் தென்னை மரங்களின் வளர்ச்சியை மேம்படுத்துதல், ஊட்டச்சத்துக் குறைபாட்டை நிவர்த்தி செய்தல் மற்றும் காய்ப்புத் திறனை அதிகரித்தல் ஆகியவற்றில் வேர் டானிக்கின் முக்கியத்துவம் குறித்து எடுத்துரைக்கப்பட்டது. மேலும், டானிக் தயாரிக்கும் முறை, சரியான அளவு மற்றும் பயன்படுத்தும் விதம் குறித்து மாணவர்கள் விவசாயி களுக்கு விளக்கினர். இச் செயல்விளக்கம் மூலம் விவசாயிகள் புதிய தொழில்நுட்பங்களை அறிந்து தங்கள் தென்னை சாகுபடியில் பின்பற்றுவதற்கான விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

சென்னை விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்மச்சான்றளிப்புத் துறை இயக்குநர் புதுக்கோட்டை விதைப்பரிசோதனை நிலையத்தில் ஆய்வு



புதுக்கோட்டை, நவ,27

சென்னை, விதைச் சான்றளிப்பு மற்றும் உயிர்மச்சான்றளிப்புத் துறை இயக்குநர் சந்திரசேகர் சாகமூரி, புதுக்கோட்டை மாவட்டம், திருக்கோகர்ணத்தில் இயங்கி வரும் விதைப் பரிசோதனை நிலையப் பணிகளை 26.11.26 அன்று ஆய்வு செய்தார்.

விதைப்பரிசோதனை நிலையத்தில் பெறப்படும் சான்று விதை மாதிரிகள், ஆய்வாளர் விதை மாதிரிகள் மற்றும் பணி விதை மாதிரிகளில், முளைப்புத்திறன், புறத்தூய்மை ஈரப்பதம் மற்றும் பிற இரக கலவன் முறைப்படி கணக்கிடப்படுகிறதா என்பதை ஆய்வு செய்தார். ஆய்விற்கு பயன்படும் உபகரணங்கள் நல்ல நிலையில் செயல்படுகின்றதா என்பதனையும், விதை முளைப்புத்திறன் அறையில் சரியான முறையில் ஈரப்பதம் மற்றும் வெப்பநிலை பராமரிக்கப்படுகிறதா என்பதையும் உறுதி செய்தார். பெறப்படும் விதை மாதிரிகளை உரிய முறையில் பகுப்பாய்வு மேற்கொண்டு உடனுக்குடன் பகுப்பாய்வு முடிவுகளை உரியவர்களுக்கு அனுப்பி வைத்து தரமான விதைகள் விவசாயிகளுக்கு உரிய நேரத்தில் கிடைத்திட நடவடிக்கை எடுக்குமாறு அறிவுரை வழங்கினார்.

நடப்பு 2026-2027ம் ஆண்டில் இந்நிலையத்திலிருந்து இதுவரை 2254 எண்கள் விதை மாதிரிகள் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது என்றும் பகுப்பாய்வு செய்யப்பட்ட மாதிரிகளில் 150 மாதிரிகள் தரமற்ற மாதிரிகள் என்றும் திருச்சி மண்டல விதை பரிசோதனை அலுவலர் ஆ.லீமாரோஸ் எடுத்துரைத்தார்.

மேலும் ஆய்வின் போது தஞ்சாவூர் விதை ஆய்வுத் துணை இயக்குநர் சுஜாதா, துணை இயக்குநர் (வேளாண் வணிகம்) ஜெகதீஸ்வரி, விதைச்சான்று உதவி இயக்குநர். பிரகாஷ், விதைப்பரிசோதனை நிலைய வேளாண்மை அலுவலர்கள் செ.சுமித்ராதேவி, செல்வம் ஆகியோர் உடன் இருந்தனர்.

Rithvik Pipe

25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்



பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம்
  நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள்
  ஆரோக்கியமான தண்ணீர்,
  ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள்
  தரத்திற்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும்
  நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள்
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக
  பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING
  விற்பனைக்கு பின் தரம் உங்கள்
  கண்முன்னே
- சரியான எடை, தடிமன்
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

PRODUCT RANGES

ISI PVC PIPE -	ASTM UPVC PIPE -	ISI CONDUIT PIPE -	ISI PLUMBING PIPE -	ISI BOREWELL CASING PIPE -
20mm to 250mm (All Classes)	21mm to 114mm (SCH 40, SCH80)	16mm to 63mm (Light, Medium, Heavy)	25mm to 50mm (15KG)	125mm to 250mm

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

Office
Rithvik Pipe Company, Kannaki Street,
Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
Rithvik Pipe Company, Opp Kamaraj Colony,
R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

பழங்குடியின மலைவாழ் மக்களுக்கு 'மரவாசனைப் பயிர்களிலிருந்து (ஜாதிக்காய்) மதிப்பூட்டுதல் தொழில்நுட்பங்கள் பற்றிய விழிப்புணர்வு பயிற்சி

கன்னியாகுமரி, நவ,27

மரவாசனைப் பயிர்கள் என்பது பல்லாண்டு வாழும் மரங்களிலிருந்து பெறப்படும் நறுமணப் பொருட்களாகும். சமையல் மருத்துவம் மற்றும் வாசனை திரவயம் தயாரிப்பில் இவை முக்கிய பங்கு வகிக்கின்றது. இவற்றில் ஜாதிக்காய் மற்றும் ஜாதிப்பத்திரி ஒரே மரத்தின் பழத்திலிருந்து இரண்டு வெவ்வேறு மதிப்புமிக்க வாசனை பொருட்கள் ஆகும்.



ஏராளமான மரவாசனைப் பயிர்கள் உற்பத்தி செய்யப்பட்டு ஒரு குறிப்பிட்ட காலத்தில் மட்டும் விற்பனைக்கு வரும்பொழுது அவற்றின் விலை மிகவும் குறைந்து விடுகின்றது. மேலும் சரியான சேமிப்பு கிடங்குகள், பதப்படுத்தும் வசதிகள் இல்லாமையால் 30 முதல் 40 சதவிகிதம் வரை யாருக்கும் பயன்படாமல் கெட்டுப்போய் விடுகின்றன. விளைபொருட்களுக்கு உரிய விலை கிடைக்க வேண்டும் மற்றும் தங்கள் விளைபொருட்களை அப்படியே விற்காமல் பதப்படுத்தி மற்றும் மதிப்பூட்டிய மாற்றுப் பொருட்களாக மாற்றி விற்றால் அதிக பயன் பெறலாம்.

மரவாசனைப் பயிர்களிலிருந்து (ஜாதிக்காய்) மதிப்பூட்டுதல் தொழில்நுட்பங்கள் பற்றிய விழிப்புணர்வு மற்றும் செயல்விளக்கப் பயிற்சி கன்னியாகுமாரி மாவட்டம், மேல்புறம் வட்டாரம், பேச்சிப்பாறை தோட்டக்கலை நிறுவனம், தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையத்தில் மேல்புறம் வட்டாரம், ஆறுகாணி கிராமத்தில் உள்ள பழங்குடியின மலைவாழ் மக்களுக்கு 26.11.26 அன்று நடைபெற்றது. இச்செயல்விளக்க பயிற்சியை தோட்டக்கலை நிறுவனம், தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையத்தின் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் ஜெயாஜாஸ்மின் துவக்கவுரையாற்றி மரவாசனைப்பயிர்களின் முக்கியத்துவம் குறித்து எடுத்துரைத்தார்.

தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையத்தின் பேராசிரியர் முனைவர் ரிச்சட் கென்னடி மரவாசனைப்பயிர்கள் சாகுபடி தொழில்நுட்பங்கள் மற்றும் மரவாசனைப் பயிர்களின் பேச்சிபாறை இரகங்கள் அவற்றின் நன்மைகள் குறித்து எடுத்துரைத்தார். வேளாண்மை அறிவியல் நிலையத்தின் உணவியல் மற்றும் சத்தியல் துறை உதவிப் பேராசிரியர் முனைவர் ஜெ.செல்வி, மரவாசனைப் பயிர்களில் உள்ள சத்துக்கள், ஆரோக்கிய நன்மைகள் குறித்தும் மற்றும் மரவாசனைப் பயிர்களான ஜாதிக்காயிலிருந்து மதிப்பூட்ட பட்ட பொருட்களான ஜாதிக்காய் பழ ஜாம், ஜாதிக்காய் பழபானம், ஜாதிக்காய் ஊறுகாய், ஜாதிக்காய் விதையை பதப்படுத்தும் முறைகள் மற்றும் ஜாதிக்காய் பொடி தயாரித்தல் குறித்தும் செயல் விளக்கத்துடன் விரிவாக எடுத்துரைக்கப்பட்டது. இச்செயல்விளக்க பயிற்சியில் 25 பழங்குடியின மலைவாழ் மக்கள் கலந்து கொண்டு பயனடைந்தார்கள்.

NGO இணைப்புப் பயிற்சியை நிறைவு செய்த வேளாண் கல்லூரி மாணவர்கள்



திருச்சி, நவ,27

திருச்சி தனலட்சுமி சீனிவாசன் பல்கலைக்கழகத்தின் (Dhanalakshmi Srinivasan University), சமயபுரம், வேளாண் அறிவியல் பள்ளியைச் சேர்ந்த வேளாண் மாணவர்கள், ஊரக வேளாண் அனுபவத் திட்டத்தின் (RAWE – Rural Agricultural Work Experience) ஒரு பகுதியாக, நாங்கா வாய்ஸ் அறக்கட்டளையில் ஐந்து நாட்கள் நடைபெற்ற NGO இணைப்புப் பயிற்சியை நிறைவு செய்தனர்.

இப்பயிற்சியின் வாயிலாக அறக்கட்டளையின் சமூக நலச் செயல்பாடுகள், கிராமப்புற சமூக மேம்பாட்டுப் பணிகள், மக்களுடன் இணைந்து செயல்படுதல் மற்றும் சமூகப் பொறுப்புணர்வு சார்ந்த பணிகள் குறித்து மாணவர்கள் கள அனுபவம் பெற்றனர். இப்பயிற்சி மாணவர்களிடையே சமூக ஈடுபாடு, நடைமுறை அறிவு மற்றும் சமூக சேவையின் முக்கியத்துவத்தை உணர்த்தும் வகையில் அமைந்தது.

RAWE திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட இந்த NGO இணைப்புப் பயிற்சி, வேளாண் மாணவர்களின் சமூகப் புரிதலையும் கள அனுபவத்தையும் மேம்படுத்தும் பயனுள்ள நிகழ்வாக அமைந்தது.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் நூற்புழு விழிப்புணர்வு நிகழ்ச்சி



கோயம்புத்தூர், நவ,27

நூற்புழுக்கள் என்பவை மிகச்சிறிய மற்றும் கண்ணுக்குத் தெரியாத நுண்ணிய புழுக்களாகும். இவை மண்ணில் வசித்து, தாவர வேர்களைத் தாக்கு கின்றன. இவை பொருளாதார ரீதியாக வணிகப் பயிர்களில் 25-30 சதவிகித மகசூல் இழப்பை ஏற்படுத்துகின்றன. நூற்புழுக்கள் எளிதில் அடையாளம் காணக்கூடிய நோய் அறிகுறிகளை ஏற்படுத்து வதோடு, பயிர்களின் வளர்ச்சி மற்றும் உற்பத்திதிறனை குறைக் கின்றன. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் நூற் புழுவியல் துறை வல்லுநர்கள், கோவை மாவட்டம், காரமடை வட்டாரத்தில் உள்ள கொடியூர் பழங்குடியின கிராமத்தை சேர்ந்த விவசாயிகள் மற்றும் பெண்களுக்கு நூற்புழு விழிப்புணர்வு நிகழ்ச்சியை நடத்தி, பண்ணைக் கருவிகள் மற்றும் வேளாண் இடுபொருட்களை விநியோகித்தனர்.

கோயம்புத்தூரில் உள்ள தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகத்தின் (TNAU) நூற்புழுவியல் துறையின் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் கே.தேவராஜன், நூற்புழு தாக்குதலால் பயிர் களின் வளர்ச்சி குன்றுதல், பயிர் மஞ்சள் நிறமடைதல் மற்றும் வேர் முடிச்சு மற்றும் வேர் அழுகல் இருப்பது போன்ற சேதத்தின் அறிகுறிகள் மூலம் அடையாளம் காணலாம். நூற்புழுக்கள் காய்கறி மற்றும் பழ பயிர்களையும் பாதிக்கின்றன. நூற்புழுக்களால் உருவாக்கப்பட்ட காயங்கள் அல்லது துளைகள் வழியாக நோயை உண்டாக்கும் பூஞ்சைகள் மற்றும் பாக்டீரியாக்கள் நுழைந்து மேலும் சேதத்தை ஏற்படுத்துகின்றன. இதன் விளைவாக, பயிர்கள் அழுகி விரைவாக வாடிவிடுகின்றன.

வேளாண்மையில் நூற்புழுக்களைக் கட்டுப்படுத்துவதற்கான 'அகில இந்திய ஒருங்கிணைந்த ஆராய்ச்சித் திட்டத்தின்' பொறுப்பு விஞ்ஞானியான முனைவர் பா.வெற்றிவேல் காளை பயிர்களைத் தாக்கும் நூற்புழுக்களின் முட்டைகளை அழிக்கும் பூஞ்சாணங் களான, பர்ப்யூரியோசிலியம்லிலாசினம்மற்றும் பொக்கோனியா கிளாமிடோஸ்போரியா போன்றவற்றின் பயன்பாடு குறித்து செயல் விளக்கம் செய்து காட்டினார்.

மேலும், அங்கக இடுபொருட்களைப் பயன்படுத்தி செறிவூட்டப்பட்ட உயிரியல் காரணிகள் மற்றும் நூற்புழுக்களுக்கு எதிர் பயிரான துளுக்க சாமந்தியை (marigold) வளர்த்தல் போன்ற சுற்றுச்சூழலுக்கு உகந்த முறைகளை வலியுறுத்தினார். வேளாண்மையில் நூற் புழுக்களைக் கட்டுப்படுத்துவதற்கான அகில இந்திய ஒருங் கிணைந்த ஆராய்ச்சித் திட்டத்தின் கீழ், 40 பழங்குடியின விவசாயிகள் மற்றும் பெண்களுக்கு மண்வெட்டி, கடப்பாரை மற்றும் வீட்டுத் தோட்ட காய்கறி விதைகளான தக்காளி, கத்திரி, வெண்டை, பாகற்காய், புடலங்காய், பொரியல் தட்டை ஆகியவற்றுடன், பேசில்லஸ் சப்டிலிஸ் மற்றும் பொக்கோனியாகிளாமிடோஸ்போரியா போன்ற உயிரியல் காரணிகளும் வழங்கப்பட்டன.



வெண்மை புரட்சியின் வளர்ச்சிக்கு தமிழக அரசின் திட்டங்கள் என்ன?



வெண்மை புரட்சி (WHITE REVOLUTION) என்பது 1970ஆம் ஆண்டில் இந்தியாவில் பால் உற்பத்தியை பெருக்கத் தொடங்கப்பட்ட மாபெரும் பால்பண்ணை மேம்பாட்டு திட்டமாகும். இத்திட்டத்தின் மூலமாக பால் பற்றாக்குறை நாடாக இருந்த இந்தியா தற்போது உலகின் மிகப்பெரிய பால் உற்பத்தி நாடாக உயர்ந்தது என்பதற்கு மூல காரணமான இருந்தவர் வெண்மை புரட்சியின் தந்தை டாக்டர் வர்கீஸ் குரியன். அவரது பிறந்த நாளை நினவு கூறும் வகையில் நேற்று தேசிய பால் தினம் நாடெங்கும் கொண்டாடப்பட்டது. தேசிய அளவில் பால் கட்டமைப்புகள் ஏற்படுத்தப்பட்டு, கிராமங்களை நகரங்களுடன் இணைத்து பால் வினியோகம் மற்றும் சேமிப்பு வசதிகளை நவீன படுத்துகிறது.

வெண்மை புரட்சி – 2.0?

பால் கொள்முதல் மேலும் அதிகரிக்கவும், கூட்டுறவு கட்டமைப்பை வலுப்படுத்தவும் வெண்மை புரட்சி 2.0 (2024 முதல் 2028-29) வரை முன்னெடுக்கப்பட்டுள்ளது குறிப்பிட்டத்தக்கது.

பால் வள உற்பத்திக்கு தமிழக அரசின் திட்டங்கள்?

1) பால் உற்பத்தியின் மூலமாக கிராமப்புற பொருளாதார வளர்ச்சிக்கு உறுதுணையாக தமிழக அரசு இருக்கிறது. தற்போது கூட பால் உற்பத்தியாளர்களின் நலனை காத்திடும் வகையில் கொள்முதல் விலையை லிட்டருக்கு 6 ரூபாய் உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது. நுகர்வோருக்கு பால் விற்பனை விலையை உயர்த்த வில்லை என்பது குறிப்பிடத்தக்க தகவல்.

2) கிராமப்புற பகுதியில் வாழும் பெண்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில், விலையில்லாத கறவை மாடுகள் வழங்கும் திட்டத்தையும் செயல்படுத்தி வருகிறது.

3) 500 நடுத்தர பால் பண்ணண அமைக்க நிதி ஒதுக்கீடு

ஒவ்வொரு பயனாளிக்கும் 5 கறவை மாடுகள் அல்லது எருமைகளை வாங்கி நடுத்தர அளவிலான பால் பண்ணை அமைக்கலாம்.

ஒரு பண்ணை (DAIRY FARM) அமைப்பதற்கான மொத்த மூதலீடு 4 லட்சம் என மதிப்பிடப்பட்டுள்ளது. இதில் கால்நடைகள் வாங்கிட 3 லட்சமும் பாரமரிப்பு மற்றும் செயல்பாட்டு மூலதனமாக 1 லட்சம் கணக்கிடப்பட்டுள்ளன. இதில் அரசின் சார்பில் 25% அதாவது ஒரு லட்சம் மானியமாக வழங்கப்படும். மீதமுள்ள 3 லட்சம் வங்கி கடனாக (BANK LOAN) பெற வழிவகை செய்யபடும்.

பயனாளிகள் தேர்வு

21 முதல் 60 வயதுக்குட்பட்ட பால் கூட்டுறவு சங்க உறுப் பினர்கள் குறைந்த பட்சமாக ஒரு கறவை மாடு வைத்திருந்து, கூட்டுறவு சங்கத்தில் பால் ஊற்றுபவராக இருக்க வேண்டும். கால் நடைகளை பாரமரிக்க போதுமான இட வசதி இருக்க வேண்டும். சொந்தமாக அல்லது குத்தகை மூலமாக குறைந்த பட்சமாக ஒரு ஏக்கர் நிலம் வைத்திருக்க வேண்டும். திட்டத்தின் பயனாளிகள் 30% பெண்களுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும். மேலும் ஆதி திராவிட பயனாளிக்கு 18%யும் பழங்குடியினருக்கு 1% முன்னுரிமை வழங்கப்படும். ஒரு மாடு கறவையில் நாளென்றுக்கு 7 லிட்டர் பால் தரும் எனக் கணக்கிட்டால் ஒரு பண்ணையில் 35 லிட்டர் பால் தரும். அதுவே 500 பண்ணைகளில் 17,500 லிட்டர் பால் உற்பத்தியாகும். நாம் எதிர்பார்த்த வெண்மை புரட்சி 2.0 வெற்றிகரமாக செயல்படுத்தப்படும்.

பால் உற்பத்தியாளர்களுக்கு மானிய விலையில் தீவனம் வழங்குதல்

கால்நடை பாரமரிப்பு துறை செயலாளர் வெளியிட்டுள்ள அரசாணை படி, மாநிலம் முழுவதும் தகுதியுள்ள பால் உற்பத்தியாளர்களுக்கு, ஒரு கால்நடைக்கு நாள் ஒன்றுக்கு 3 கிலோ விதம் 10 மாதங் களுக்கு 2 கிலோ என்ற மானிய விலையில் அடர்தீவனம் (CON-CENTRATED FOOD) வழங்கப்படும். இதன் மூலமாக 45000 பேர் பயன் அடைவார்கள். இதற்கான மானியத் தொகை 8 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

தாது உப்பு கலவை வழங்குதல்

பால் உற்பத்தித் திறனை மேம்படுத்தும் நோக்கில் 50 ஆயிரம் கன்றுகளுக்கு, ஒரு ஆண்டுக்கு தாது உப்புக்கலவை 50% மானியத்தில் வழங்கிட 2.76 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. 850 டன் தாது உப்பு கலவை வழங்கப்படும்.

ஆவின் மற்றும் கூட்டுறவு பால் சங்க உறுப்பினர்கள் தான் மேலே கண்ட திட்டத்தில் சேர தகுதியானவர்கள்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

நிலக்கடலை சாகுபடியில் விதை பரிசோதனை அவசியம்

திருச்சி, நவ,27

எண்ணெய் வித்துபயிர்களில் நிலக்கடலை முக்கிய பங்கு வகிக் கிறது. தமிழகத்தில் நிலக்கடலை பயிரிட மார்கழி பட்டம், மாசி பட்டம் மற்றும் சித்திரை பட்டம் உகந்தது. இந்த பட்டங்களில் சாகுபடி செய்யும் போது தட்பவெட்பநிலை சாதகமாக இருப்பதால் அதிக மகசூல் பெறப்படுகிறது. திருச்சி மாவட்டத்தில் மணப்பாறை, மருங் காபுரி, உப்பிலியபுரம், துறையூர், முசிறி, தா.பேட்டை, தொட்டியம் மற்றும் மண்ணச்சநல்லூர் வட்டாரங்களில் பரவலாக நிலக்கடலை சாகுபடி செய்யப்படுகிறது. நிலக்கடலை சாகுபடியில் நல்ல விளைச் சல் பெற சான்று பெற்ற விதைகளையே பயன்படுத்த வேண்டும். நிலக்கடலையில் அதிக இடுபொருள் செலவாக இருப்பது விதையே ஆகும். ஈரப்பதம், புறத்தூய்மை, முளைப்புத்திறன் மற்றும் பிறரகங் களின் கலப்பு விகிதம் ஆகியவற்றால் விதையின் தரம் நிர்ணயிக் கப்படுகிறது. இந்திய அரசால் நிர்ணயிக்கப்பட்ட விதைகளின் தரப்படி நிலக்கடலையின் முளைப்புத்திறன் 70%, ஈரப்பதம் 9% மற்றும் புறத்தூய்மை 96% என நிர்ணயிக்கப் பட்டுள்ளது. ஈரப்பதம் அதிக மாக இருந்தால் பூச்சி மற்றும் பூஞ்சாண தாக்குதலுக்கு வழி வகுக்கும், மேலும் முளைப்புத்திறனும் பாதிக்கப்படும். நிலக்கடலை சாகுபடி செய்யும் விவசாயிகள் மற்றும் விதை உற்பத்தியாளர்கள் நிலக்கடலையின் தரத்தை பரிசோதனை செய்து பயன்படுத்த வேண்டும் என திருச்சி மாவட்ட விதை பரிசோதனை அலுவலர் ஆ.லீமாரோஸ் தெரிவித்துள்ளார். விதை பரிசோதனை செய்வதற்கு 1000 கிராம் நிலக்கடலை விதையை விதை பரிசோதனை நிலையத் திற்கு அனுப்ப வேண்டும். திருச்சி மாவட்டத்தில் புத்தூர் நால்ரோட்டில் ஒருங்கிணைந்த விதைச்சான்று மற்றும் அங்கக சான்று வளாகத் தின் கீழ்தளத்தில் இயங்கி வரும் விதை பரிசோதனை நிலையத்திற்கு நேரிலோ பதிவுத் தபா லிலோ அனுப்ப வேண்டும். அனுப்பப்படும் விதை மாதிரியானது அவ்விதைக் குவியலின் பிரதியாக இருக்க வேண்டும். ஒருவர் ஒன்றுக்கும் மேற்பட்ட மாதிரிகளை அனுப்பும் போது, ஒவ்வொரு மாதிரிக்கும் தனிக்குறியீட்டு எண்கள் வழங்க வேண்டும். சுத்தமான பையில் விதை மாதிரிகளை எடுத்து பயிர் மற்றும் ரகத்தின் விவரங்கள் அடங்கிய துண்டு சீட்டு உள்ளே வைத்து அனுப்பலாம். ஒரு விதை மாதிரிக்கு ரூ.80 பரிசோதனை கட்டணம் செலுத்த வேண்டும் என திருச்சி மாவட்ட விதை பரி சோதனை அலுவலர் ஆ.லீமாரோஸ், வேளாண்மை அலுவலர்கள் ந.சி.அனிதா மற்றும் இரா.புவனேஸ்வரி ஆகியோர் தெரிவித்து உள்ளார்கள்.

Rithvik Pipe

25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்



பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம் நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள் ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள் தரத்திற்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள் அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன் ஏமாற்றமில்லா தயாரிப்பு

PRODUCT RANGES

ISI PVC PIPE -	ASTM UPVC PIPE -	ISI CONDUIT PIPE -	ISI PLUMBING PIPE -	ISI BOREWELL CASING PIPE -
20mm to 250mm (All Classes)	21mm to 114mm (SCH 40, SCH80)	16mm to 63mm (Light, Medium, Heavy)	25mm to 50mm (15KG)	125mm to 250mm

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

Office
Rithvik Pipe Company, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
Rithvik Pipe Company, Opp Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

வறட்சியால் வாடும் நெற்பயிர்களைக் காக்க ட்ரோன் மூலம் பிபிஎப்எம் தெளிப்பு மற்றும் செயல்விளக்கம்

புதுக்கோட்டை, நவ,27

புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வகோட்டை வட்டாரத்தில் உள்ள பழைய கந்தர்வகோட்டை, சோளம்பட்டி மற்றும் புதுக்கோட்டை வட்டார மணவிடுதி கிராமங்களில் வறட்சியால் பாதிக்கப்பட்டு வரும் நெற்பயிர்களைக் காப்பாற்றும் வகையில் ட்ரோன் மூலம் பிபிஎப்எம் திரவ உயிர் உரம் தெளிக்கும் செயல்விளக்கம் விவசாயிகளுக்கு அளிக்கப்பட்டது. தமிழ்நாடு வேளாண்மை பல்கலை துணைவேந்தர் மற்றும் வேளாண்மை விரிவாக்கக் கல்வி இயக்குநர் ஆகியோரின் வழிகாட்டுதலின்படி, வேளாண்மை அறிவியல் நிலையம், வம்பன் மற்றும் புதுக்கோட்டை மாவட்ட வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை இணைந்து இந்நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருந்தனர். இந்நிகழ்ச்சிக்கு வேளாண்மை அறிவியல் நிலையத்தின் முதுநிலை விஞ்ஞானி மற்றும் தலைவர் முனைவர் ம.தமிழ்ச்செல்வன் தலைமை தாங்கினார். புதுக்கோட்டை மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் ந.சண்முகஜெயந்தி முன்னிலை வகித்தார். வேளாண்மை அலுவலர்கள் மகேஸ்வரி, விக்னேஷ் மற்றும் உதவி வேளாண்மை அலுவலர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சியில் வேளாண்மை அறிவியல் நிலையத் தொழில்நுட்ப வல்லுநர் க.பி.செந்தில்குமார் பேசுகையில், தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தால் பரிந்துரைக்கப்பட்டுள்ள பிபிஎப்எம் திரவ நுண்ணுயிர் கரைசல், வறட்சி மற்றும் நீர்ப்பற்றாக்குறையால் பாதிக்கப்படும் பயிர்களின் வளர்ச்சிக்கு உதவக்கூடியது. இந்நுண்ணுயிர் சைட்டோகைனின், ஆக்சின் போன்ற தாவர வளர்ச்சி ஊக்கிகளை உற்பத்தி செய்து பயிர்களின் வளர்ச்சியை ஊக்குவிக்கின்றன. மேலும், பயிர்களின் வறட்சியைத் தாங்கும் திறனை அதிகரித்து, நீர்ப்பற்றாக்குறை நிலவும் சூழலிலும் பயிர்களின் பசுமையைப் பராமரிக்க உதவுகின்றன என்று தெரிவித்தார். மேலும், ஒரு ஏக்கருக்கு சாதாரண விசைத் தெளிப்பான் மூலம் தெளிப்பதற்கு 1,000 மில்லி பிபிஎப்எம் திரவத்தை 100 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும். ட்ரோன் மூலம் தெளிப்பதற்கு ஒரு லிட்டர் பிபிஎப்எம் திரவத்தை 20 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கலாம். காலை அல்லது மாலை நேரங்களில் தெளிப்பது சிறந்தது. இதனை இரசாயனப் பூச்சிக்கொல்லிகளுடன் கலந்து தெளிக்கக் கூடாது என்றும் விவசாயிகளுக்கு விளக்கமளித்தார். புதுக்கோட்டை மாவட்டத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள சம்பா நெற்பயிர்களின் வளர்ச்சியைப் பாதுகாக்க விவசாயிகள் இத்தொழில்நுட்பத்தைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொண்டார்.

மேலும், பிபிஎப்எம் திரவத்தை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், வேளாண்மை அறிவியல் நிலையங்கள் மற்றும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் அக்ரிகார்ட் இணைய தளம் வாயிலாகப் பெற்றுக் கொள்ளலாம் என்றும் தெரிவித்தார்.

புதுப்பிக்கத்தக்க ஆற்றல் பற்றிய விழிப்புணர்வு பயிற்சி

திண்டுக்கல், நவ,27

திண்டுக்கல் மாவட்டம் ரெட்டியார்சத்திரம் வட்டம் அட்மா திட்டத்தின் கீழ் வேலம்பட்டி கிராமத்தில் வேளாண்மை உதவி இயக்குநர் பழனிச்சாமியின் ஆலோசனைபடி புதுப்பிக்கதக்க ஆற்றல் பற்றிய விழிப்புணர்வு பயிற்சியினை விவசாயிகளுக்கு எடுத்து கூறினர்.



புதுப்பிக்கத்தக்க ஆற்றல் என்பது சூரியன், காற்று, நீர், பயிர் கழிவுகள் ஆகியவற்றிலிருந்து ஆற்றலை திரும்ப பெரும் நிகழ்வாகும்.

இப்பயிற்சியில் காந்தி கிராம கிராமிய பல்கலைக்கழக துணைவேந்தர் ரெங்கநாதன், ஒய்வு, தலைமை தாங்கினார். இப்பயிற்சியில் வேளாண்மை உதவி பொறியாளர் ஹரிணி முன்னிலை வகித்து அப்பகுதியில் அதிகம் பயிரிடும் மக்காச்சோள பயிர் சாகுபடி முறை மற்றும் பருத்தி சாகுபடி முறை போன்ற பயிர்களின் சாகுபடி தொழில்நுட்பங்களை எடுத்து கூறினார். உதவி பொறியியல் அலுவலர், துறை சார்ந்த திட்டங்கள் மற்றும் குறைந்த வாடகைக்கு உழவு செய்தல் தேங்காய் பறிக்கும் இயந்திரங்களை வாடகைக்கு எடுத்து செலவினை குறைப்பது போன்ற விளக் கங்களை விவசாயிகளுக்கு எடுத்துக் கூறினார்.

இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை வட்டார தொழில்நுட்ப மேலாளர் மற்றும் உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் பொன் தமிழரசு, அருண்குமார் ஆகியோர் சிறப்பாக செய்திருந்தனர்.

மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!

நெற்பயிரில் வறட்சி மேலாண்மை குறித்து PPFM தொழில்நுட்பம் விவசாயிகளுக்கு நேரடி செயல்விளக்கம்!



மயிலாடுதுறை, நவ,27

மயிலாடுதுறை மாவட்டம், செம்பனார்கோயில் வட்டாரத்திற்கு உட்பட்ட காலமநல்லூர் மற்றும் மருதம்பள்ளம் கிராமங்களில், நெற்பயிரில் ஏற்படும் வறட்சியினால் ஏற்படும் பாதிப்புகளைக் குறைத்து, பயிர்களின் வளர்ச்சியைப் பாதுகாக்கும் வகையில் வறட்சி மேலாண்மை குறித்த விழிப்புணர்வு மற்றும் செயல் விளக்க நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையம், ஆடுதுறையைச் சேர்ந்த உதவிப் பேராசிரியர் முத்துக் குமாரராஜா (மண்ணியல் துறை) முத்துக்குமார் பூச்சிகள் துறை மற்றும் முத்துக்குமரன் விரிவாக்கத்துறை ஆகியோர் கலந்து கொண்டு, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் மூலம் தயாரிக்கப்பட்ட PPFM (Pink Pigmented Facultative Methylotrophs) எனப்படும் இளஞ்சிவப்பு நிற நிறமி கொண்ட நன்மை தரும் நுண்ணுயிர் கரைசலின் பயன்பாடு மற்றும் அதன் முக்கியத்துவம் குறித்து விவசாயிகளுக்கு விரிவாக எடுத்துரைத்தார்.

நெற்பயிரில் நிலவும் வறட்சிச் சூழ்நிலையால் பயிர்களின் வளர்ச்சி பாதிக்கப்படுதல், இலைகள் வாடுதல், தூர்களின் எண்ணிக்கை குறைதல் மற்றும் மகசூல் இழப்பு ஏற்படுதல் போன்ற பாதிப்புகள் உண்டாகலாம். இத்தகைய சூழ்நிலைகளில் பயிர்களின் வறட்சியைத் தாங்கும் திறனை மேம்படுத்து வதற்கான தொழில்நுட்பங்களைக் கடைப்பிடிப்பதன் அவசியம் குறித்து விளக்கப்பட்டது.

மேலும், PPFM நுண்ணுயிர் கரைசல் தாவர வளர்ச்சி ஊக்கிகளான சில இயற்கை வளர்ச்சி ஒழுங்குபடுத்தும் பொருட்கள் உற்பத்தி மற்றும் தாவரங்களின் உடலியல் செயல்பாடுகளில் உதவக்கூடிய நுண்ணுயிரியாகும்.

இதன் மூலம் பயிர்களின் வளர்ச்சி மற்றும் சுற்றுச்சூழல் அழுத்தங்களைத் தாங்கும் திறனை மேம்படுத்த உதவுகிறது.

இந்த நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை உதவி வேளாண்மை அலுவலர் பிரபாகரன், அட்மா திட்ட வட்டார தொழில்நுட்ப மேலாளர் தியாகு மற்றும் உதவி தொழில்நுட்ப மேலாளர் செல்வகுமரன் ஆகியோர் செய்திருந்தனர்.

மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!



மைக்ரோகிரீன்ஸ், உயிர்வாயு மற்றும் மண்புழு உரம் தயாரிப்பு செயல்விளக்கப் பயிற்சி



புதுக்கோட்டை, நவ,27

புதுக்கோட்டை மாவட்டம், கீழமங்கலத்தில் சேது பாஸ்கரா வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய மாணவர்கள் சார்பில் கிராமப்புற வேளாண் அனுபவத் திட்டத்தின் கீழ் விவசாயிகள் மற்றும் பொதுமக்களுக்கு வேளாண் தொழில்நுட்ப செயல்விளக்கப் பயிற்சி நடைபெற்றது.

இப்பயிற்சியில் கல்லூரியைச் சேர்ந்த மாணவர்கள் ர.சா.சபீன்ராஜ், ர.அபு குஹாஃபா, செ.நவின், ர.சொக்கலிங்கம், ம.அருண்குமார் மற்றும் செ.ஸ்ரீ பிரபு ஆகியோர் கலந்து கொண்டு பல்வேறு வேளாண் தொழில்நுட்பங்கள் குறித்து பொதுமக்களுக்கு விளக்கி, நேரடி செயல்விளக்கங்களைச் செய்து காண்பித்தனர்.

மைக்ரோகிரீன்ஸ் (Microgreens) வளர்ப்பு : குறைந்த இடவசதியில், குறுகிய காலத்தில் அதிக ஊட்டச்சத்துகள் நிறைந்த இளம் கீரை களை உற்பத்தி செய்யும் மைக்ரோகிரீன்ஸ் வளர்ப்பு முறை குறித்து விளக்கப்பட்டது. இதற்குத் தேவையான விதைத் தேர்வு, விதைகளை ஊறவைத்தல், தட்டுகளில் மண் அல்லது தென்னை நார்க்கழிவு நிரப்புதல், விதைத்தல், நீர் தெளித்தல், சூரிய ஒளி மற்றும் ஈரப்பதப் பராமரிப்பு, அறுவடை செய்யும் காலம் ஆகியவை குறித்து செயல்விளக்கம் அளிக்கப்பட்டது. வீட்டிலேயே ஆரோக்கியமான உணவுக்குத் தேவையான கீரைகளை உற்பத்தி செய்யும் எளிய முறையாக இது எடுத்துரைக்கப்பட்டது.

உயிர்வாயு (Biogas) தயாரிப்பு : கால்நடைகளின் சாணம் மற்றும் மக்கும் கரிமக் கழிவுகளை மூலப்பொருளாகக் கொண்டு உயிர்வாயு தயாரிக்கும் முறை குறித்து விளக்கப்பட்டது. உயிர்வாயுக் கலனின் அமைப்பு, சாணம் மற்றும் தண்ணீர் கலக்கும் முறை, வாயு உருவாகும் செயல்முறை, சமையலுக்குப் பயன்படுத்தும் விதம் ஆகியவை எடுத்துரைக்கப்பட்டன. மேலும், சமையல் எரிபொருள் செலவைக் குறைத்தல், கால்நடைக் கழிவுகளை முறையாகப் பயன்படுத்துதல் மற்றும் சுற்றுச்சூழல் மாசுபாட்டைக் குறைத்தல் போன்ற நன்மைகள் விளக்கப்பட்டன. உயிர்வாயு தயாரித்த பிறகு கிடைக்கும் கழிவுக் கரைசலை இயற்கை உரமாகப் பயன்படுத்தலாம் என்பதும் எடுத்துரைக்கப்பட்டது.

மண்புழு உரம் (Vermicompost) தயாரிப்பு : விவசாயக் கழிவுகள், கால்நடைச் சாணம் மற்றும் மக்கும் கரிமப் பொருட்களைப் பயன் படுத்தி மண்புழு உரம் தயாரிக்கும் முறை குறித்து விரிவான செயல் விளக்கம் அளிக்கப்பட்டது. மண்புழு உரத்தொட்டி அமைக்கும் முறை, தொட்டியின் அடிப்பகுதியில் தேங்காய் நார்க்கழிவு, மணல், தோட்ட மண், மாட்டுச் சாணம் மற்றும் வைக்கோல் போன்றவற்றைப் படுக்கைகளாக அமைத்தல், மண்புழுக்களை விடுதல், ஈரப் பதத்தைப் பராமரித்தல் மற்றும் தொட்டியைப் பாதுகாக்கும் முறைகள் விளக்கப்பட்டன. மேலும், உரம் தயாராகும் காலம், உரம் தயாரானதற்கான அறிகுறிகள், மண்புழுக்களைப் பிரித்தெடுக்கும் முறை, உரத்தை அறுவடை செய்தல் மற்றும் பயிர்களுக்குப் பயன்படுத்தும் அளவு குறித்தும் எடுத்துரைக்கப்பட்டது.

இப்பயிற்சியின் மூலம் சிறிய இடத்தில் மைக்ரோகிரீன்ஸ் வளர்த்து சத்தான உணவைப் பெறுதல், கால்நடைக் கழிவுகளிலிருந்து உயிர்வாயு தயாரித்தல், விவசாயக் கழிவுகளை மறுசுழற்சி செய்து மண்புழு உரம் உற்பத்தி செய்தல் போன்ற பயனுள்ள தொழில் நுட்பங்கள் பொதுமக்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்டன. இத்தொழில் நுட்பங்களை விவசாயிகள் தங்களது வீடுகள் மற்றும் பண்ணை களில் நடைமுறைப்படுத்துவதன் மூலம் உற்பத்திச் செலவைக் குறைத்து, கூடுதல் வருமானம் ஈட்டுவதுடன் சுற்றுச்சூழலையும் பாதுகாக்க முடியும் என மாணவர்கள் எடுத்துரைத்தனர்.

ஆவின் பால் உற்பத்தி மற்றும் பதப்படுத்தும் நிலையத்திற்கு RAWE மாணவர்கள் கல்விச் சுற்றுப்பயணம்

விருதுநகர், நவ,27

விருதுநகர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூரில் அமைந்துள்ள மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்திற்கு, S.Thangapazham Agricultural College மாணவர்கள் ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் (RAWE) ஒரு பகுதியாக கல்விச் சுற்றுப்பயணம் மேற்கொண்டனர். இச்சுற்றுப்பயணத்தின் போது, பல்வேறு கிராமங்களில் உள்ள பால் உற்பத்தியாளர்களிடமிருந்து பால் சேகரிக்கப்படும் முறை, பால் பதப்படுத்தும் செயல்முறைகள், பால் தரப் பரிசோதனை மற்றும் பால் குளிரூட்டும் முறைகள் குறித்து பார்வையிட்டனர். மேலும், ஆவின் நிறுவனம் மூலம் விற்பனை செய்யப்படும் பால் வகைகள், பால் சார்ந்த மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்களின் உற்பத்தி மற்றும் விற்பனை முறைகள், நிறுவனத்தின் நிர்வாக மற்றும் அமைப்பு கட்டமைப்பு ஆகியவை குறித்து அறிந்துகொண்டனர்.



வீரணாம்பாளையத்தில் தென்னை மரங்களில் காண்டாமிருக வண்டைக் கட்டுப்படுத்த பாரம்பரிய பானை பொறி செயல்விளக்கம்



நாமக்கல், நவ,27

நாமக்கல் மாவட்டம், பரமத்தி வட்டாரத்தில் கிராமப்புற வேளாண் அனுபவத் திட்டத்தின் கீழ் செயல்பட்டு வரும் கரூர் அரசு வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய மாணவர்கள், வீரணாம்பாளையம் கிராமத்தில் தென்னை மரங்களைத் தாக்கும் காண்டாமிருக வண்டைக் கட்டுப்படுத்த பாரம்பரிய பானை பொறி அமைக்கும் முறையை விவசாயிகளுக்கு செயல்விளக்கம் செய்து காட்டினர்.

தென்னை மரங்களில் காண்டாமிருக வண்டின் தாக்குதலைக் குறைக்கும் வகையில், சாணம் மற்றும் மீன் தூள் பயன்படுத்தி பாரம்பரிய பானை பொறி தயாரிக்கும் முறையை மாணவர்கள் விளக்கினர். இந்தப் பொறியின் ஈர்ப்பால் காண்டாமிருக வண்டுகள் பானைக்குள் வந்து சிக்கிக்கொள்ளும். பின்னர், பொறியில் சிக்கிய வண்டுகளை அகற்றுவதன் மூலம் அவற்றின் தாக்கத்தைக் கட்டுப்படுத்தலாம் என விவசாயிகளுக்கு எடுத்துரைத்தனர்.

இதன் மூலம் ரசாயனப் பயன்பாட்டைக் குறைத்து, உள்ளூரில் கிடைக்கும் பொருட்களைக் கொண்டு குறைந்த செலவில் தென்னைப் பயிரில் பூச்சி மேலாண்மை மேற்கொள்ளும் பாரம்பரிய முறைகள் குறித்து விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

மேலும், கிராம விவசாயிகளுடன் கலந்துரையாடல் நடத்தி, அவர்கள் எதிர்கொள்ளும் வேளாண் பிரச்சினைகள் மற்றும் குறைகளை மீண்டும் கேட்டறிந்தனர். விவசாயிகள் தெரிவித்த குறைகளுக்கு உரிய தொழில்நுட்ப ஆலோசனைகள் வழங்குவதுடன், எதிர்வரும் நாட்களில் மேலும் பல செயல்விளக்கங்கள் மற்றும் வேளாண் சார்ந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என மாணவர்கள் தெரிவித்தனர்.

கல்யாண்
ஜுவல்லர்ஸ்



Toll Free No. 1800 - 4257333

உரக்கடையைப் பார்வையிட்ட வேளாண்மைக் கல்லூரி மாணவர்கள்!



திருப்பத்தூர், நவ,27

திருப்பத்தூர் மாவட்டம், மாடப்பள்ளி பகுதியில் பாலாறு வேளாண்மைக் கல்லூரி மாணவர்கள் தங்களது ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் (RAWE Programme) ஒரு பகுதியாக உரக்கடையைப் பார்வையிட்டனர்.

இந்தப் பார்வையின்போது, கடையில் விற்பனை செய்யப்படும் பல்வேறு வகையான உரங்கள், அவற்றின் பயன்பாடுகள், பயிர் களுக்குத் தேவையான உரங்களைத் தேர்வு செய்யும் முறைகள், உரங்களின் விலை மற்றும் விவசாயிகளுக்கு உரங்கள் விநியோகம் செய்யப்படும் முறைகள் குறித்து கேட்டறிந்தனர்.

மேலும், உரங்களைச் சரியான அளவில் பயன்படுத்துவதன் அவசியம் மற்றும் உர மேலாண்மை குறித்த நடைமுறை விளக்கங் களையும் அறிந்து கொண்டனர். இந்தப் பார்வை மாணவர்களுக்கு வேளாண் இடுபொருள் மேலாண்மை குறித்த நடைமுறை அறிவைப் பெற உதவியாக அமைந்தது.

நெற்பயிரில் இலை நிற அட்டவணை மூலம் தழைச்சத்து மேலாண்மை வேளாண் களப்பயிற்சி



வேளாண் களப்பயிற்சியின் ஒரு பகுதியாக, நெற்பயிரில் இலை நிற அட்டவணையைப் பயன்படுத்தி தழைச்சத்து மேலாண்மை செய்வது குறித்து குருக்களும் கிராமத்தில் உள்ள விவசாயிகளுக்கு செயல் விளக்கம் செய்து காட்டினார். இதில், நெற்பயிரின் இலை நிறத்தை அட்டவணையுடன் ஒப்பிட்டு, பயிருக்கு எப்போது தழைச்சத்து தேவைப்படுகிறது என்பதைக் கண்டறியும் முறையை நேரடியாக விளக்கினார். மேலும், வாரத்திற்கு ஒருமுறை சுமார் பத்து இடங்களில் இலைகளின் நிறத்தைப் பரிசோதித்து, அதன் அடிப்படையில் தேவையான அளவு தழைச்சத்து உரமிடும் முறையையும் செய்து காட்டினார்.

இந்தச் செயல்விளக்கத்தில், நடவு செய்த நெற்பயிரில் 14 நாட்களுக்குப் பிறகும், நேரடி விதைப்பு செய்த நெற்பயிரில் 21 நாட்களுக்குப் பிறகும் இலை நிறத்தைக் கண்காணிக்கத் தொடங்க வேண்டும் என்று விளக்கப்பட்டது. இதன் மூலம் தேவையற்ற உரப் பயன்பாட்டைத் தவிர்த்து, உரச் செலவைக் குறைத்து, பயிரின் சீரான வளர்ச்சியைப் பராமரிக்கும் முறையை விவசாயிகளுக்கு எடுத்துரைத்தார்.

மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!



ஒட்டுப் பொறிகள் மூலம் பூச்சிகளைக் கட்டுப்படுத்துவது குறித்து வேளாண் மாணவிகளின் செயல்விளக்கப் பயிற்சி



திருச்சி, நவ,27

திருச்சிராப்பள்ளி மாவட்டம், நாளந்தா வேளாண்மைக் கல்லூரியின் இறுதியாண்டு மாணவிகளான மா.ஹரிணி, அ.பராசக்தி, மு.பிரியதர்ஷினி, சே.பிரியதர்ஷினி, நா.ஸ்ரீவித்யா, பா.சுபர்ணா, ஹ.தஸ்லீமா நஸ்ரின், ச.வைஷ்ணவி, நா.ச.விவிதா ஸ்ரீ மற்றும் ச.ஞா.யுவஸ்ரீ ஆகியோர், ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் (RAWE) கீழ் துறையூர் வட்டாரத்தில் களப்பயிற்சி மேற்கொண்டு வருகின்றனர்.

இதன் ஒரு அங்கமாக கிருஷ்ணாபுரம் கிராமத்தில் விவசாயிகளுக்கு ஒட்டுப் பொறிகளின் (Sticky Traps) பயன்பாடு குறித்து செயல்விளக்கம் அளித்தனர்.

மஞ்சள் மற்றும் நீல நிற ஒட்டும் பொறிகளின் முக்கியத்துவம், அவற்றைப் பயிர்களில் நிறுவும் முறை மற்றும் தீங்கு விளைவிக்கும் பூச்சிகளைக் கண்காணித்துக் கட்டுப்படுத்துவதில் அவற்றின் பங்கு குறித்து மாணவிகள் விளக்கினர்.

மஞ்சள் நிற ஒட்டும் பொறிகள் வெள்ளை ஈ, அசுவினி போன்ற பூச்சிகளைக் கவரவும், நீல நிற ஒட்டும் பொறிகள் குறிப்பாக த்ரிப்ஸ் பூச்சிகளைக் கவரவும் பயன்படுகின்றன என்பதை எடுத்துரைத்தனர்.

மேலும், ஒட்டுப் பொறிகளைப் பயன்படுத்துவதன் மூலம் பூச்சிகளின் நடமாட்டத்தைக் கண்காணித்து, தேவைக்கேற்ப கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும் என்றும், இரசாயனப் பூச்சிக்கொல்லிகளின் பயன்பாட்டைக் குறைத்து ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை முறைகளைப் பின்பற்றுவதன் அவசியத்தையும் வலியுறுத்தினர்.